ந.க.எண். 4712/2016/வ1, நாள்: 27.07.2016.

மாவட்ட வன அலுவலகம்,
திண்டுக்கல் வனக்கோட்டம்,
திண்டுக்கல்.

பொருள் :- வனம் - திண்டுக்கல் வனக்கோட்டம், ஆத்தூர் வட்டம், தொப்பம்பட்டி கிராமம் - திரு.எ.ரவி, என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் W.P.(MD)No:10957/2014-ல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு - 25.02.2016-ல் தீர்ப்புரை வழங்கப்பட்டது - தொடர்பாக..

பார்வை:- 1) சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளை W.P.(MD)No:10957/2014 நாள்:25.02.2016.
2)மாவட்ட வன அலுவலர், திண்டுக்கல் ந.க.எண்:வ1/4712/2014 நாள்:11.04.2016.
3)தனி வட்டாட்சியர், வன நிர்ணயத்திட்டம், திண்டுக்கல் ந.க.எண்:177/2016 அ நாள்:17.06.2016.

********

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டம், தொப்பம்பட்டி கிராமம் திரு.எ.ரவி, என்பவர் சிறுமலை சரகம், சிறுமலை வடமேற்கு சரிவு பாதுகாப்புக்காட்டில் உள்ள தொப்பபம்பட்டி முதல் தொழுக்காடு வழியாக செல்லும் பாதையிலிருந்து புல எண்:103-ல் கண்ட பட்டா நிலத்திற்கு செல்லும் இணைப்பு பாதையில் சென்று வர அனுமதிக்க கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் W.P.(MD)No:10957/2014-ல் கடந்த 25.02.2016 அன்று வழங்கப்பட்ட தீர்ப்புரையில் மேற்படி புல எண்:103-ல் கண்ட பட்டா நிலத்தினை அடையும் கிளை சாலையினை சர்வே செய்து எல்லையினை நிர்ணயித்து தர ஆணையிடப்பட்டது.

பார்வை-2-ல் கண்ட கடிதத்தில் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையின் ஆணையின்படி மேற்படி சாலையினை சர்வே செய்து எல்லையினை நிர்ணயம் செய்து தர தனி வட்டாட்சியர், வன நிர்ணயத்திட்டம் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

பார்வை-3-ல் கண்ட தனி வட்டாட்சியர், வன நிர்ணயத்திட்டம் கடிதத்தில் மேற்கண்ட தொப்பம்பட்டி முதல் தொழுக்காடு வழியாக செல்லும் பாதையிலிருந்து புல எண்:103-ல் கண்ட பட்டா நிலத்திற்கு செல்லும் இணைப்பு பாதையினை சர்வே செய்து, மேற்படி தொப்பம்பட்டி முதல் தொழுக்காடு வழியாக செல்லும் 4 கெஜம் (3.6 மீட்டர்) அகலத்திலும் புல எண்:103-க்கு செல்லும் கிளை பாதை 2 கெஜம் (1.8 மீட்டர்) அகலத்திலும் நிர்ணயித்து கல் நடப்பட்டு எல்லை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

மேற்கண்ட பாதையினை திரு.எ.ரவி, என்பவர் தொப்பம்பட்டி கிராமம் புல எண்:103-க்கு இவ்வழித்தடத்தில் கால் நடையாக சென்று வர மட்டும் அனுமதி வழங்கப்படுகிறது. வாகனங்கள் செல்ல வனத்துறையின் அனுமதி பெற வேண்டும். மேற்படி அனுமதிக்கப்பட்ட வழித்தட உரிமையை தவிர வனப்பகுதியில் அத்துமீறிய நடவடிக்கைகளை கண்காணித்து தடுப்பு நடவடிக்கை எடுத்திட வனச்சரக அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

ஓம்/து.வெங்கடேஷ்,
மாவட்ட வன அலுவலர்,
திண்டுக்கல் கோட்டம், திண்டுக்கல்.

பெறுநர்

வனச்சரக அலுவலர், சிறுமலை.

நகல்: திரு.எ.ரவி,
த/பெ எஸ்.அழகர்சாமி,
எண்:2/1 குவாரி ரோடு,
சௌந்தரம் நகர்,
அம்பாத்துரை,
திண்டுக்கல் மாவட்டம்.

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

10/8/16

வரைதொழில் அலுவலர்